Chemical Industry.

* 231. Q.—THIRU O. N. SUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a chemical industry utilising coral stones available in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம் நாள் ஒன்றுக்கு 50 டன் கால்ஷியம் கார்பைட் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான உரிமம் கோரி மத்திய அரசுக்கு மனுச் செய்துள்ளது.

Sodium Hydrosulphite Plant at Ramanathapuram

* 232 Q.—THIRU N. DENNIS:
DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Sodium Hydrosulphite Plant is to be set up at Ramanathapuram; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம் இந்திய அரசிடமிருந்து ஆண்டொன்றுக்கு 3,500 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலை ஒன்றை இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவ பூர்வாங்க அனுமதி பெற்றுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையின் மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுமார் 100-லிருந்து 300 பேருக்கு வேலை கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

DR. H. V. HANDE: Sir, may I know the total amount of capital that is likely to be invested in this industry and the rough turnover and other details ? Also, may I know whether any headway has been made with regard to starting the industry and when it is likely to be started and completed ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுமார் 140 லட்சம் ரூபாய் இதற்கு ஆகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. முன்னாலேயே உற்பத்தி அளவு எவ்வளவு என்று குறிப்பிட்டேன். இப்போது தான் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது. எந்த 'ப்ராசஸை' நாம் பின்பற்றலாம் என்று இப்போது முயற்சி எடுத்து வருகிறோம். அமெரிக்க நாட்டில் ஒரு பிராசசும், பெல்ஜியம் நாட்டில் ஒரு பிராசசும், ஸ்விட்சர்லாந்து நாட்டில் ஒரு பிராசசும் இருக்கிறது. எதைத் தேர்ந்தெடுப்பது என்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள் நம் மாநிலத்தில் எங்கே மிகுதியாகக் கிடைக்கின்றன? இராமநாதபுரம் மாவட்டத்தில் மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள் பெறுவதிலே சங்கடம் எதுவும் இருக்காது. காரணம், இது ஒரு ரசாயனத் தொழிற்சாலை. இதை முன்நின்று நடத்த, தனியார் ஒருவர் முன்வந்து இருக்கிறார். அவரிடத்தில் இது ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. பின்தங்கிய பகுதியில் ஆரம்பித்தால் மத்திய அரசாங்கம் உதவி கொடுக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம்.

திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து முறையீடுகள்

*** 233 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கச் சார்பில், திருப்பூர் வழக்கறிஞர்கள் தங்குமிடத்தை (Bar Association Room) விரிவுபடுத்தித் தரவேண்டும் எனக்கேட்டு விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் திருப்பூர் வழக்கறிஞர்கள் தங்குமிடத்தைப் பார்த்து இருக்கிறார்கள். அது மோசமான நிலையில் இருக்கிறது. அதை விரிவுபடுத்திப் புதிதாக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் அப்போது என்னருகில் இருந்தார்கள். இப்படிப்பட்ட முயற்சிக்கு வழக்கறிஞர்களிடமிருந்து நிதி திரட்டலாம் என்று சொன்னதாக நினைவில் இருக்கிறது. அதைச் செய்து கொடுத்தால், இதையும் பரிசீலிக்கலாம்.

நொய்யல் ஆற்றிலிருந்து பிரியும் வாய்க்கால்கள்

*** 234 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நொய்யல் ஆற்றில் இருந்து (திருப்பூர் வட்டாரம்) ஆண்டிபாளையம் குளத்திற்கும், முதலிபாளையம் குளத்திற்கும் இடையே வாய்க்கால்களை தூர் எடுத்து, ஆழப்படுத்தும் வேலை அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலைகள் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.